**GROUP II INTERVIEW PROGRAMME**

# NEWS OF THE DAY

# 10.11.2019

THE HINDU

TAMIL NADU

1. Coonoor gets waste management park
2. Include Chennai in clean air programme, Centre urged
3. The State government, which is keen on promoting micro-irrigation (MI) by investing around Rs. 2,010 crore in the current year, has decided to absorb the entire cost of installation of the system for sugarcane farmers.
4. Kudimaramathu work sanctioned at a cost of □ 2.46 crore for 12 irrigation tanks and inlet channels 12 tanks renovated in Ariyalur district
5. With the Tamil Nadu government expected to make a decision on the eco-restoration of the Buckingham Canal this month, over 2 lakh residents are keeping their fingers crossed.
6. With the Tamil Nadu government expected to make a decision on the eco-restoration of the Buckingham Canal this month, over 2 lakh residents are keeping their fingers crossed.
7. Delhi's air quality improves, but still 'poor'
8. Mettur Surplus Water Scheme to kick off in March-April: CM. 'Project will be implemented at a cost of □615 crore'

# NATIONAL

1. Temple at disputed site, mosque within Ayodhya, rules SC



**What the court said**

- Faith and belief of Hindus since prior to construction of mosque and subsequent thereto has always been that **Janmasthan of Lord Ram is the place where Babri Mosque has been constructed** which faith and belief is proved by documentary and oral evidence *(From the addendum written by one of the five judges)*
- On the balance of probabilities, **there is clear evidence to indicate that the worship by the Hindus in the outer courtyard continued unimpeded in spite of the setting up of a grill-brick wall in** 1857. Their possession of the outer courtyard stands established together with the incidents attaching to their control over it
- The destruction of the mosque took place in breach of the order of status quo and an assurance given to this Court. **The destruction of the mosque and the obliteration of the Islamic structure was an egregious violation of the rule of law**
- The disputed site was government land in the revenue records. **The fact that there lay a temple beneath the destroyed structure has been established by the Archaeological Survey of India (ASI) and the underlying structure was not an** Islamic structure

**Out in force:** RAF men deployed to maintain law and order in Ayodhya on Saturday. AP

2. Chief Minister Y.S. Jagan Mohan Reddy has decided to go ahead with the conversion of the government, Mandal Praja Parishad (MPP) and Zilla Parishad (ZP) schools into English medium from Classes 1 to 6 in the first phase, instead of up to Class 8 as originally proposed, starting from the academic year 2020-21.
3. The Andhra Pradesh government saved Rs. 33.76 crore by procuring 2,64,920 4G SIM cards from Airtel for distribution to employees of village and ward secretariats and village volunteers, through reverse tendering.
4. Assam Civil Service officer Hitesh Dev Sarma has been appointed as the new State Coordinator for the

National Register of Citizens (NRC). He has replaced Prateek Hajela, an IAS officer of the Assam-Meghalaya cadre

INTERNATIONAL

1. First batch of 562 pilgrims all praise for Kartarpur facilities
2. Donald Trump to visit India 'at some point'
3. India-Russia tri-service exercise next month. Indra 2019 is expected to enhance interoperability between both the national armed forces to jointly undertake operations under the UN flag.
4. Ahead of the World Diabetes Day on November 14, the World Health Organisation (WHO) is launching an initiative to expand access to affordable insulin.
5. Saudi Aramco stock offering to launch November 17, gives few details on IPO size

தமிழால் இணைவோம்

# தி இந்து

1. மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆட்சி அமைக்க வருமாறு பாஜகவுக்கு ஆளுநர் ஸ்ரீ பகத் சிங்க் கோஷ்யாரி அழைப்பு.
2. 615 கோடி செலவில் 100 ஏரிகளுக்கு நீர் நிரப்பும் "மேட்டூர் உபரிநீர் திட்டத்துக்கு" ஏப்ரலில் பணி தொடங்கப்படும் - முதல்வர் அறிவிப்பு.
3. இன்று மிலாது நபி திருநாள். நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் மிலாது நபியாக கொண்டாடப்படுகிறது.
4. கர்த்தார்பூர் வழித்தடத்தை குர்தாஸ்பூரில் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
5. **<u>அயோத்தி வழக்கு:</u>**
   i. அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்டலாம்.
   ii. முஸ்லிம்களுக்குத் தனியாக 5 ஏக்கர் நிலத்தை அரசு வழங்க வேண்டும்.
   iii. சர்ச்சைக்குரிய இடத்தை மத்திய அரசு கட்டுப்பாட்டில் வைத்து, கோயில்

கட்டுவதற்குத் தனியாக அறக்கட்டளை உருவாக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

iv. இந்த அரசியல் சாசன அமர்வில் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, டி.ஒய்.சந்திரசூட், அசோக் பூஷண், எஸ்.அப்துல் நசீர் என 5 நீதிபதிகள் இடம் பெற்றிருந்தனர். இதில் ஒரு முஸ்லிம் நீதிபதி அப்துல் நசீர்.

v. இந்த 5 நீதிபதிகளும் எந்தவிதமான மாறுபட்ட தீர்ப்பை வழங்காமல் ஒரே மாதிரியாக ஒரே தீர்ப்பை வழங்கியுள்ளார்கள்.

vi. கடந்த 1992-ம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்ட நிகழ்வு என்பது திட்டமிட்டுச் செய்யப்பட்ட நடவடிக்கை என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

vii. 1992-ம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் அடுத்த 10 நாட்களில் அதை விசாரிக்க அப்போதைய பிரதமர் நரசிம்ம ராவ் அரசு நீதிபதி லிபரான் தலைமையில் ஒரு நபர் கமிஷனை அமைத்தது.

viii. 1992-ம் ஆண்டு அமைக்கப்பட்ட லிபரான் கமிஷன், 2009-ம் ஆண்டு மன்மோகன் சிங்

பிரதமராக இருந்தபோது அறிக்கை தாக்கல் செய்தது.

ix. உச்ச நீதிமன்ற வரலாற்றிலேயே ஒரு வழக்கு மிக நீண்டநாட்கள் தொடர் விசாரணையாக விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு அளிக்கப்பட்டதில் இது 2-வது வழக்காகும். இந்த வழக்கில் 40 நாள்கள் விசாரணை நடைபெற்றது. இதற்கு முன், கடந்த 1973-ம் ஆண்டு கேசவானந்த் பாரதி வழக்கு 68 நாட்கள் விசாரிக்கப்பட்டது.

# தினமணி

1. லட்சம் டன் வெங்காயம் இறக்குமதி விலையை கட்டுப்படுத்த மத்திய அரசு அதிரடி
2. பெயர், பாலினம் திருத்தத்துக்காக ஆதார் விதிகளில் மாற்றம்
3. காவிரி டெல்டா மாவட்டங்களிலும், அதன் ஆற்றுப்படுகைகளிலும் மீத்தேன் வாயு எடுக்கும் ஹைட்ரோ கா◌ா◌்பன் திட்டத்துக்கு தடை விதிக்கக் கோரிய வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், மத்திய அரசு பதிலளிக்க நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.
4. உச்சநீதிமன்றத்தின் 69 ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக சனிக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
5. அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தை குடிசை இல்லாத மாநிலமாக மாற்றிட நடவடிக்கை எடுத்து வருகிறோம் என முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தா◌ா◌்.
6. புல் புல்’ புயல்: ஒடிஸாவில் பலத்த மழை

7. கர்தார்பூர் வழித்தடத்தை திறந்துவைத்தார் பிரதமர் மோடி! முதல் யாத்ரீகர்கள் குழுவில் மன்மோகன், ஹர்சிம்ர

சுமாா் 4.5 கி.மீ. தொலைவுகொண்ட இந்த வழித்தடம் வழியாகச் செல்லும் யாத்ரீகர்கள், நுழைவு இசைவு (விசா) இல்லாமல் பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில், கர்தாா்பூர் வழித்தடத்தை இந்தியப் பகுதியில் பிரதமர் நரேந்திர மோடியும், பாகிஸ்தான் பகுதியில் அந்நாட்டின் பிரதமர் இம்ரான் கானும் சனிக்கிழமை திறந்துவைத்தனர்.

8. உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு அனுமதி அளித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதேசமயம், முஸ்லிம் தரப்பினர் மசூதி கட்டுவதற்கு அயோத்தியிலேயே 5 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

9. பள்ளி மாணவர்களுக்கு தேசிய செயற்கைக்கோள் போட்டி நடத்தப்படுகிறது என விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.



THE TIMES OF INDIA

1. Hindus made a better case, Waqf Board couldn't prove exclusive possession of Ayodhya site: SC
2. If VHP design is followed, temple may take at least five five years to build

It will take at least five more years and 250 expert expert artisans working tirelessly for the shrine to be completed, were it to be done according to Vishwa Hindu Parishad's (VHP) design

There is no artisan at the moment at the VHP karyashala since the last expert engraver, Rajnikanth Sompura, died earlier in July this year

2. Water level in Bhavanisagar dam touches 105ft after 40 yrs

# அயோத்தி... அன்று முதல் இன்று வரை

1528- முகலாய பேரரசர் பாபரின் தளபதியான மீர்பாகியால் பாபர் மசூதி கட்டப்பட்டது.

1885- அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் மேற்கூரை கட்ட அனுமதி கோரி மஹான் ரகுவீர் தாஸ் என்பவர் ஃபைஸாபாத் மாவட்ட நீதிமன்றத்தில் மனு; அதனை நிராகரித்தது நீதிமன்றம்.

1949- சர்ச்சைக்குரிய இடத்தின் வெளிப்பகுதியில், மைய விதானத்தின் கீழே குழந்தை ராமர் சிலை நிர்மாணம்.

1950- குழந்தை ராமர் சிலையை வழிபட உரிமை கோரி ஃபைஸாபாத் மாவட்ட நீதிமன்றத்தில் கோபால் சிம்லா விஷாரத் மனு தாக்கல். பரமஹம்ச ராமசந்திர தாஸ் சார்பிலும் அதேபோன்ற மனு தாக்கல்.

1959- அயோத்தியில் உள்ள சர்ச்சைக்குரிய இடத்துக்கு அனுமதி கோரி நிர்மோஹி அகாரா வழக்கு.

1961- அதே இடத்துக்கு உரிமை கோரி உத்தரப் பிரதேச சன்னி வக்ஃபு வாரியமும் மனு தாக்கல்.

பிப். 1, 1986- சர்ச்சைக்குரிய இடத்தில் ஹிந்துக்கள் வழிபாடு நடத்த திறந்து வைக்குமாறு அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு.

ஆக. 14, 1989- அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடம் தொடர்பான விவகாரத்தில் அப்போதைய நிலை அப்படியே தொடர அலாகாபாத் உயர்நீதிமன்றம் உத்தரவு.

டிச. 6, 1992- பாபர் மசூதி இடிக்கப்பட்டது.

ஏப். 3, 1993- சர்ச்சைக்குரிய இடத்தை அரசு எடுத்துக்கொள்ளும் வகையில், 'அயோத்தி சட்டம்' இயற்றம். அந்தச் சட்டத்தின் பல்வேறு விதிகளுக்கு எதிராக இஸ்மாயில் ஃபரூக்கி என்பவர் உள்பட பல்வேறு தரப்பினர் அலாகாபாத் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல். உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்குகளை இந்திய அரசமைப்புச் சட்டப்

பிரிவு 139ஏ-வை பயன்படுத்தி, தனது விசாரணை அதிகாரத்துக்கு கொண்டு வந்தது உச்சநீதிமன்றம்.

அக்.24, 1994- இஸ்மாயில் ஃபருக்கி வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், 'மசூதி என்பது இஸ்லாமிய மதத்தின் உள்ளங்கம் அல்ல' என்று கருத்து தெரிவித்தது.

ஏப்ரல் 2002- சர்ச்சைக்குரிய நிலம் யாருக்கு சொந்தம்? என்ற விசாரணையை தொடங்கியது அலாகாபாத் உயர்நீதிமன்றம்.

மார்ச் 13, 2003- அஸ்லாம் புரே வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், சர்ச்சைக்குரிய இடத்தில் எந்தவொரு மத நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தடை விதித்தது.

செப். 30, 2010- சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தை சன்னி வக்ஃபு வாரியம், நிர்மோஹி அகாரா, ராம் லல்லா தரப்பினர் சரிசமமாகப் பிரித்துக்கொள்ள வேண்டுமென அலாகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு.

மே 9, 2011- அயோத்தி வழக்கில் அலாகாபாத் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் தடை.

மா◌ா◌ச் 21, 2017- அயோத்தி வழக்கின் மனுதாரர்கள் நீதிமன்றத்துக்கு வெளியே சமரசம் செய்துகொள்ள, உச்சநீதிமன்றத்தின் அப்போதைய தலைமை நீதிபதி ஜே.எஸ். கேஹர் பரிந்துரை.

ஆக. 7, 2017- அலாகாபாத் உயர்நீதிமன்றத்தின் 1994-ஆம் ஆண்டு தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க 3 நீதிபதிகள் அமர்வை ஏற்படுத்தியது உச்சநீதிமன்றம்.

பிப்.8, 2018- அயோத்தி தொடர்பான மனுக்களை விசாரிக்கத் தொடங்கியது உச்சநீதிமன்றம்.

ஜூலை 20, 2018- அந்த வழக்கில் தனது தீர்ப்பை ஒத்திவைத்தது உச்சநீதிமன்றம்.

செப். 27, 2018- அயோத்தி வழக்கை 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற உச்சநீதிமன்றம் மறுப்பு. 3 நீதிபதிகளைக் கொண்ட புதிய அமர்வு வழக்கை விசாரிக்கும் என அறிவிப்பு.

அக். 29, 2018- அயோத்தி வழக்கு விசாரணையை 2019 ஜனவரி முதல் வாரத்தில் தகுந்த நீதிபதிகள் அமர்வு மேற்கொள்ளும் என்றும், அந்த அமர்வே வழக்கு விசாரணைக்கான அட்டவணையை முடிவு செய்யும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவு.

டிச. 24, 2018- 2019 ஜனவரி 9-ஆம் தேதி முதல் அயோத்தி வழக்கை விசாரிக்க உச்சநீதிமன்றம் முடிவு.

ஜன. 4, 2019- அயோத்தி வழக்கு விசாரணைக்கான தேதியை தகுந்த நீதிபதிகள் அமர்வு ஜனவரி 10-ஆம் தேதி முடிவு செய்யும் என உச்சநீதிமன்றம் விளக்கம்.

ஜன. 8, 2019- தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதிபதிகள் எஸ்.ஏ. போப்டே, என்.வி. ரமணா, யு.யு.

லலித், டி.ஒய். சந்திரசூட் ஆகிய 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வை அயோத்தி விசாரணைக்கு அமைத்தது உச்சநீதிமன்றம்.

ஜன. 10, 2019- அயோத்தி வழக்கு விசாரணையில் இருந்து நீதிபதி யு.யு. லலித் தன்னை விடுவித்துக் கொண்டதால் புதிதாக நீதிபதிகள் அமர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்தது. வழக்கு விசாரணை ஜனவரி 29-ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.

ஜன. 25, 2019- அயோத்தி வழக்கு விசாரணைக்கான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வை மாற்றியமைத்தது உச்சநீதிமன்றம். தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதிபதிகள் எஸ்.ஏ. போப்டே, டி.ஒய். சந்திரசூட், அசோக் பூஷண், எஸ்.ஏ. நஸீர் ஆகியோ◌ா◌் அதில் இடம்பெற்றனர்.

ஜன. 29, 2019- சர்ச்சைக்குரிய இடத்தை சுற்றிய பகுதியிலிருந்து தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருந்த 67 ஏக்கர் நிலத்தை அதன்

உரிமையாளர்களிடம் ஒப்படைக்க அனுமதி கோரி உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு மனு.

பிப். 26, 2019- அயோத்தி விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்துகொள்ள ஆதரவு தெரிவித்த உச்சநீதிமன்றம், அதுதொடர்பாக மாா்ச் 5-இல் உத்தரவு பிறப்பிப்பதாகக் கூறியது.

மாா்ச் 8, 2019- உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி எஃப்.எம்.ஐ. கலிஃபுல்லா தலைமையிலான மத்தியஸ்த குழுவுக்கு அயோத்தி விவகாரத்தை பரிந்துரைத்தது உச்சநீதிமன்றம்.

ஏப். 9, 2019- சர்ச்சைக்குரிய இடத்தை சுற்றிய பகுதியிலிருந்த 67 ஏக்கர் நிலத்தை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க அனுமதி கோரும் மத்திய அரசின் மனுவுக்கு நிா்மோஹி அகாரா எதிா்ப்பு.

மே 9, 2019- மத்தியஸ்த குழு தனது இடைக்கால அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் சமா்ப்பித்தது.

மே 10, 2019- மத்தியஸ்தம் செய்வதற்கான அவகாசத்தை ஆகஸ்ட் 15 வரை நீட்டித்தது உச்சநீதிமன்றம்.

ஜூலை 11, 2019- அயோத்தி விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யப்படுவதன் நிலவரம் குறித்த அறிக்கையை கேட்டது உச்சநீதிமன்றம்.

ஜூலை 18, 2019- மத்தியஸ்த குழு தொடர்ந்து இயங்கவும், ஆக. 1-இல் அறிக்கை சமர்ப்பிக்கவும் உச்சநீதிமன்றம் அனுமதி.

ஆக. 1, 2019- மத்தியஸ்த குழுவின் அறிக்கை சீலிடப்பட்ட உறையில் வைத்து உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு.

ஆக. 2, 2019- மத்தியஸ்த முயற்சி தோல்வியை சந்தித்ததால், ஆக. 6-ஆம் தேதி முதல் அயோத்தி வழக்கை அன்றாடம் விசாரிக்க உச்சநீதிமன்றம் முடிவு.

ஆக. 6, 2019- அயோத்தி விவகாரத்தில் அன்றாட விசாரணை தொடங்கியது.

அக். 4, 2019- அயோத்தி வழக்கு விசாரணையை அக். 17-க்குள் நிறைவு செய்வதாக உச்சநீதிமன்றம் தெரிவித்தது. உத்தரப் பிரதேச வக்ஃபு வாரிய தலைவருக்கு பாதுகாப்பு வழங்க மாநில அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு.

அக். 16, 2019- அயோத்தி வழக்கு விசாரணையை நிறைவு செய்து, தீர்ப்பை ஒத்தி வைத்தது உச்சநீதிமன்றம்.

நவ. 9, 2019- அயோத்தி வழக்கில் இறுதித் தீர்ப்பு வழங்கியது உச்சநீதிமன்றம்.